# பெப்ரவரி – 07 – புதன்

**புனித கொன்றாட்**

**நேர்மையாளரின் வாய் ஞானத்தை அறிவிக்கும்: திபா. 37:30**

## முதல் வாசகம் : 1 அரசர் 10 : 1 - 10

ஆண்டவரின் பெயரை முன்னிட்டு, சாலமோன் அடைந்திருந்த புகழைப் பற்றிச் சேபா நாட்டு அரசி கேள்வியுற்றுக் கடினமான கேள்விகள் மூலம் அவரைச் சோதிக்க வந்தார்.அவர் பரிவாரங்களோடும், நறுமணப் பொருள், மிகுதியான பொன், விலையுயர்ந்த கற்கள், ஆகியவற்றைச் சுமந்துவந்த ஒட்டகங்களோடும், எருசலேமுக்கு வந்து சேர்ந்தார். அவர் சாலமோனிடம் தம் மனத்திலிருந்த கேள்விகள் அனைத்தையும் வெளிப்படுத்தினார்.சாலமோன் அவருடைய கேள்விகளுக்கெல்லாம் விடை கூறினார். அவர் கேட்டவற்றுள் பதிலளிக்க இயலாதபடி எதுவும் அரசருக்குப் புதிராகத் தோன்றவில்லை.சேபாவின் அரசி, சாலமோனுக்கிருந்த பல்வகை ஞானம், அவர் கட்டியிருந்த அரண்மனை,அவர் உண்டு வந்த உணவு வகைகள், அவருடைய அலுவலரின் வரிசைகள், பணியாளர்களின் சுறுசுறுப்பு, அவர்களுடைய சீருடை, பானம் பரிமாறுவோரின் திறமை, ஆண்டவரின் இல்லத்தில் அவர் செலுத்திய எரிபலிகள் ஆகியவற்றைக் கண்டு பேச்சற்றுப் போனார்.அவர் அரசரை நோக்கிக் கூறியது "உம்முடைய செயல்களையும் ஞானத்தையும் பற்றி என் நாட்டில் நான் கேள்விப்பட்டது உண்மையே எனத் தெரிகிறது.நான் இங்கு வந்து அவற்றை நேரில் காணும் வரை, அச்செய்திகளை நம்பவில்லை. இப்பொழுதோ இங்குள்ளவற்றில் பாதியைக் கூட அவர்கள் எனக்குச் சொல்லவில்லையென அறிகிறேன். உண்மையில் நான் கேள்விப்பட்டதை விட, உம் ஞானமும் செல்வமும் மிகுதியாய் இருக்கின்றன.உம்முடைய மனைவியர் நற்பேறு பெற்றோர்! எப்போதும் உமக்குப் பணிபுரிந்து உம்முடைய ஞானம் நிறைந்த மொழிகளைக் கேட்கும் உம்முடைய பணியாளரும் நற்பேறு பெற்றவரே!உம்மீது பரிவு கொண்டு உம்மை இஸ்ரயேலின் அரியணையில் அமர்த்திய உம் கடவுளாகிய ஆண்டவர் போற்றி! போற்றி! ஆண்டவர் இஸ்ரயேலின் மீது என்றென்றும் அன்பு கொண்டுள்ளதால், அவர்களுக்கு நீதி நியாயம் வழங்க உம்மை அரசராக ஏற்படுத்தியுள்ளார்."அவர் ஏறத்தாழ நாலாயிரத்து எண்ணூறு கிலோ பொன், ஏராளமான நறுமணப் பொருள்கள், விலையுயர்ந்த கற்கள் ஆகியவற்றை அரசருக்கு அளித்தார். சேபாவின் அரசியிடமிருந்து வந்தது போல, அத்துணை நறுமணப் பொருள்கள் அரசர் சாலமோனுக்கு அதன் பிறகு வந்ததே இல்லை.

**பதில்பாடல் :** நேர்மையாளரிள் வாய் ஞாளத்தை அறிவிக்கும்

## நற்செய்தி : மாற்கு 7 : 14 - 23

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தை மீண்டும் தம்மிடம் வரவழைத்து, அவர்களை நோக்கி, "நான் சொல்வதை அனைவரும் கேட்டுப் புரிந்து கொள்ளுங்கள்.வெளியேயிருந்து மனிதருக்குள்ளே சென்று அவர்களைத் தீட்டுப்படுத்தக் கூடியது ஒன்றுமில்லை. மனிதருக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் தீட்டுப் படுத்தும்.(கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும் ") என்று கூறினார்.அவர் மக்கள் கூட்டத்தை விட்டு வீட்டிற்குள் வந்தபோது அவருடைய சீடர் அவரிடம் இந்த உவமையைப்பற்றிக் கேட்க,அவர் அவர்களிடம், "நீங்களுமா இந்த அளவுக்குப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறீர்கள்? வெளியேயிருந்து மனிதருக்குள்ளே செல்லும் எதுவும் அவர்களைத் தீட்டுப் படுத்த முடியாது என உங்களுக்குத் தெரியாதா?ஏனென்றால், அது அவர்களுடைய உள்ளத்தில் நுழையாமல் வயிற்றுக்குச் சென்று கழிப்பிடத்திற்குப் போய் விடுகிறது" என்றார். இவ்வாறு அவர் எல்லா உணவுப் பொருள்களும் தூயனவென்று குறிப்பிட்டார்.மேலும் "மனிதருக்கு உள்ளேயிருந்து வருவதே அவர்களைத் தீட்டுப்படுத்தும்.ஏனெனில் மனித உள்ளத்திலிருந்தே பரத்தைமை, களவு, கொலை, விபசாரம், பேராசை,தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யத் தூண்டும் தீய எண்ணங்கள் வெளிவருகின்றன.தீயனவாகிய இவை அனைத்தும் உள்ளத்திலிருந்து வந்து மனிதரைத் தீட்டுப் படுத்துகின்றன" என்றார்.

**தியானம் :** இதோ உலகத்தின் முடிவுவரை எந்நாளும் நான் உங்கள் கூடவே இருக்கின்றேன். (மத்.28:20) என்று கூறிய இயேசுக்கிறிஸ்துவின் வசனத்தை விசுவசிக்கும் எவரும் இறைவனால் கைவிடப்படுவதில்லை. ஞான வாழ்வின் சிறந்தவாராக புகழப்பட்ட சாலமோன் இறைவனால் மிகப்பெரிய ஆலயத்தை கட்டி முடிப்பதற்குரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஆதித் திருச்சபை வரலாற்றில் இவா் ஓா் அரசனாக புகழப்பட்டார். வெளியேயிருந்து மனிதருக்குள் சென்று அவா்களை தீட்டுப்படுத்தக்கூடியது ஒன்றுமில்லை. மனிதருக்குள்ளேயிருந்து வெளியே வருபவையே அவா்களைத் தீட்டுப்படுத்தும். தோற்றத்தால் மட்டும் கொண்டுவரும் மாற்றங்கள் தோற்றுப்போகும் மாற்றங்களாகும். பதவி, தகுதி, வருவாய் போன்றவற்றறைக் கொண்டு மனிதனை மதிப்பதும் செல்வமின்றி, வேலையின்றி நோய்வாய்ப்பட்டு இருக்கும் மனிதனை கண்டும் காணாது செல்லும் பொழுது நாம் செத்தே கிடக்கின்றோம். கோவிலுக்குச் செல்வது, விவிலியம் வாசிப்பது,, பிறருக்கு உதவி செய்வது, நாற்பது நாளும் நோன்பிருப்பது இவைமட்டும் மனிதனை நல்லவனாக மாற்றுவதில்லை நல்ல உறவு கொண்டு பிறரை அன்பு செய்து வாழும் பொழுது நாம் முழு மனிதனாக மாறுகின்றோம். ஆகவே எவ்வாறு இறைவன் சாலமோனோடு துணையாக இருந்து மிக பிரமாண்டமான ஆலயத்தை கட்டி முடிப்பதற்குரிய ஞானமும், புத்தியும் வல்லமையும் கொடுத்து எல்லோராலும் ஆச்சரியமாக உற்று நோக்க வைத்தாரோ அதேமாதிரி எமது வாழ்க்கை முறையை இறைவனுக்கு ஏற்புடையதாக மாற்றியமைத்து குடும்பம், சூழல் சமூகத்தைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தி வரப்போகும் தவக்காலத்தை எதிர்கொள்வோம்.